## ஏப்ரல்- 18- புதன்

### அனைத்துலகோரே! கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்! திபா. 66:1

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 8 : 1 – 8**

அந்நாட்களில் இஸ்தேவானைக் கொலை செயவதற்குச் சவுலும் உடன்பட்டிருந்தார். அந்த நாள்களில் எருசலேம் திருச்சபை பெரும் இன்னலுக்குள்ளாகியது. திருத்தூதர்களைத் தவிர மற்ற அனைவரும் யூதேயா, சமாரியாவின் நாட்டுப் புறமெங்கும் சிதறடிக்கப்பட்டுப் போயினர்.இறைப்பற்று உள்ள மக்கள் ஸ்தேவானை அடக்கம்செய்து, அவருக்காக மாரடித்துப் பெரிதும் புலம்பினர்.சவுல் வீடுவீடாய் நுழைந்து ஆண்களையம் பெண்களையும் இழுத்துக்கொண்டுபோய், அவர்களைச் சிறையிலடைக்கச் செய்தார். இவ்வாறு அவர் திருச்சபையை அழித்துவந்தார்.சிதறிய மக்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்து வந்தனர்.பிலிப்பு சமாரியா நகர் சென்று அங்குள்ள மக்களுக்கு மெசியாவைப்பற்றி அறிவித்தார்.பிலிப்பு சொன்னவற்றைக் கேட்டும் அவர் செய்த அரும் அடையாளங்களைக் கண்டும் வந்த திரளான மக்கள் ஒரு மனத்தோடு அவருக்குச் செவிசாய்த்தனர்.ஏனெனில் பலரைப் பிடித்திருந்த தீய ஆவிகள் அவர்களிடமிருந்து உரத்தக் குரலுடன் கூச்சலிட்டுக் கொண்டே வெளியேறின. முடக்குவாதமுற்றோர், கால் ஊனமுற்றோர் பலரும் குணம் பெற்றனர்.இதனால் அந்நகரில் பெரும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.

**நற்செய்தி : யோவான்6 : 35 – 40**

அக்காலத்தில்இயேசு அவர்களிடம், ”வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது.ஆனால், நான் உங்களுக்குச் சொன்னவாறே நீங்கள் என்னைக் கண்டிருந்தும் நம்பவில்லை.தந்தை என்னிடம் ஒப்படைக்கும் அனைவரும் வந்து சேருவர். என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிடமாட்டேன். ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்.”அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம்.மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்” என்று கூறினார்.

**தியானம்:** இன்றைய இறை தியான வாசகங்கள் நாங்கள் இறைவனின் திருவுளப்படி வாழ்ந்தோமேயானால் மரித்தாலும்கூட இயேசுவோடு உயிர்பெற்றெழுந்து நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்லப்படுவோம் என்பதை தெளிவுபடுத்துகின்றது. தந்தையின் விருப்பப்படி மண்ணில் மனிதனாகப் பிறந்த இறைமகன் இயேசு அனைத்து மக்களையும் பாவ வாழ்விலிருந்து மீட்டெடுத்து எமக்கு புதுவாழ்வு தந்துள்ளார். அவ்வாறு புதுவாழ்வு பெற்றுள்ள நாங்கள் எங்கு சென்றாலும், எவ்வாறான சூழ்நிலைகளிலும் நாங்கள் இறைவனுக்கு இயேசுவைப்பற்றி அறிவிக்கவும் நன்றிகளையும், புகழ்ச்சிகளையும் இயேசு ஒருவருக்கே செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். இன்றைய முதல் வாசகத்தில் யோவான் கொலை செய்ய அந்நாட்டில் ஏற்பட்ட போராட்டத்தின் நிமித்தம் சிதறுண்ட மக்கள் யூதேயா, சமாரியாவில் சென்ற இடமெல்லாம் இயேசுவைப்பற்றி அறிவித்தார்கள். (தி.ப.8:1)ல் பார்க்கின்றோம். சிதறுண்ட மக்கள் இருக்க இடமில்லையே, உண்ண உணவில்லையெ என்று சும்மா இருந்திருக்கலாம். ஆனால் தூய ஆவியானவர் அவர்கள் மத்தியில் செயல்பட்டுள்ளார் என்பதை நாங்கள் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. ஏனென்றால் “:தூய ஆவி உங்கள் மீது வரும் பொழுது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்றுக்கொண்டு எருசலேமிலும், யூதேயாவிலும் உலகின் கடை எல்லை வரைக்கும் சாட்சிகளாயிருப்பீர்கள். (தி.ப. 1:8)ல் என்று இயேசு கூறுவதைப் பார்க்கின்றோம். தூய ஆவியானவரைப் பெற்றுள்ள எங்களையும் எங்கு செல்ல வேண்டும், என்ன செய்ய வேண்டும், என்ன சொல்ல வேண்டும் என்று தூர்ய ஆவியானவர் நல்வழியில் நடத்திச் செல்கின்றார். நாங்களும் எமது நாட்டுப்பிச்சனைகளால் பல நாடுகளில் சிதைந்து போய்க் கிடக்கின்றோம் ஆனால் நாங்கள் எப்படி வாழ்கின்றோம்? சிதறுண்டு சென்ற மக்கள் இயேசுவை அறிவித்ததைப் போன்று நாங்கள் அறிவிக்கின்றோமா? அல்லது ஏனொதானோ என்று வாழ்கின்றோமா? என்று சிந்தித்து எங்கு சென்றாலும், என்ன நேர்ந்தாலும் ஆவியாரின் துணையுடன் நல்வழி நடந்து நற்பணிபுரிய எங்களைத் தயார்படுத்துவோம்.